[1982 மார்ச் 19

பாக்கம்பாடி அணைத் திட்டம்.

*வினா எண் 564— திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கள்ளக்குறிச்சி வட்டம் பாக்கம்பாடி அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: (அ), (ஆ) மற்றும் (இ): வெள்ளாற்றின் பாக்கம்பாடி அருகே அணை கட்டுவதற்கான திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது. தற்போது, வெள்ளாற்றின் நீரியல் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்நீரியியல் கணிப்புகள் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிந்தபின் அரசுக்கு அறிக்கை அனுப்புவதாக தலைமைப் பொறியாளர்(ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாக்கம்பாடி அணைத் திட்டம் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட திட்டமாகும். ஆனால் இவ்வளவு காலதாமதம் ஆனதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. அந்தப் பகுதி மிகவும் வறண்ட பகுதி. களர் நிலமாக இருக்கின்ற பகுதி. ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுத்தால், அந்தப் பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு சுமார் 20 கிராம மக்களுக்குப் பயன் தரும், குடிநீர் இல்லாத பல கிராமங்கள் குடிநீர் வசதி பெறும். ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுத்து, அங்கே பாசன வசதி ஏற்படுத்திக் கொடுத்தால், அந்தப் பகுதி மேம்பாடு அடைய வசதியாக இருக்கும். ஆகவே, அதை நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணை கட்டுவதன் மூலமாக எதிர் பார்க்கும் அளவிற்கு நீர் வரத்து நமக்குக் கிடைக்குமா என்பது தான் காலதாமதத்திற்குக் காரணம். இந்த ஏப்ரல் மாதத்தோடு அந்தக் கணிப்பு வேலைகள் முடிந்து விடும். அதற்கு அடுத்து திட்டங்கள் தயாரித்து நமக்கு அனுப்புவார்கள். அதன் மூலமாக குவையூர் ஏரிக்கும் அதன் கீழே கண்மாய்களுக்கும் நீர் பெறு

[1982 மார்ச் 19]

வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டு, 2,300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்புள்ளது என்று முதல் நிலை மதிப்பீட்டில் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே விரிவாக நாம் அறிக்கை பெற்ற பிறகு தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க ஆவன செய்யும்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அணைகட்டுகின்றபோது அங்கே வருகின்ற நீர்வரத்தை ஆராய்ச்சி செய்து எந்த அளவிற்கு நீர் வரும் என்பதைப் பரிசீலித்து, அதன் பிறகுதான் கட்டப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே பல அணைகள் கட்டப்பட்டுள்ள இடங்களில், பாசனம் ஏற்கனவே பெற்றுக் கொண்டு இருக்கின்ற பகுதிகள் பாதிக்கப்படாமல், அதற்குத் தண்ணீர் விட்டுவிட்டு, புதிதாகப் பாசன வசதி ஏற்படுத்தும் வகையில் கட்டுகிறார்களா அல்லது புதிதாகக் கட்டப்படுகின்ற அணைகளுக்குக் கீழேயுள்ள நிலங்கள் பாதிக்கப்படுகின்ற வகையில் கட்டுகிறார்களா என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் சரியான முறையில் அதற்கு விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று பல இடங்களில் கட்டப்பட்டுள்ள அணைகள் எல்லாம் புதிதாகப் பாசன வசதி ஏற்பட்ட இடங்களுக்குப் பாய்கிறது. கீழே பெரும்பான்மையாகப் பாய்ந்து கொண்டு இருந்த நிலங்களுக்கு பாயாமல் அவைகள், நஞ்சையாக இருந்தவை, புஞ்சையாக மாறும் அளவிற்கு இருக்கிறது. இது குறித்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கனவே பல முறை சொல்லியிருக்கிறேன், இந்தக் கேள்வியை நான் கேட்பதற்குக் காரணம், நீங்கள் தற்போது கட்டும் அணைக்குக் கீழ்ப் பகுதியில் வாழ்பவன் நான், அதனால் பாதிப்பு ஏற்படுமோ என்று அச்சப்படுகிறேன். ஏற்கனவே அங்கே 3—4 அணைகள் உள்ளன. கீழே இருக்கின்ற நிலங்களுக்கு அதை நம்பி 12 சின்ன மடைகள் இருக்கின்றன, ஆகவே அவைகள் பாதிக்கப்படாத வகையில் இந்த அணை இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அந்த வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாகராசன் சொன்ன கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அல்லது அவருக்கு ஒரு தனி கருத்து இருக்கிறதா என்பது தெரியவில்லை. காரணம், அணை கட்டுவதன் மூலமாக அவர் குறிப்பிடுகிற சில பகுதிகள் நன்மை அடையும் என்ற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே பயன்பெற்றுவருகின்ற பகுதிகள் பாதிக்கப்பட்டு விடக் கூடாதே என்ற நல்ல எண்ணத்தோடு கேள்வி கேட்டு இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்தக் காலதாமதத்திற்கு அதுதான்

முக்கிய காரணம். இன்னொரு அணை கட்டுகிறபோது, ஏதாவது உபரி நீர் இருந்தால்தான் கட்ட முடியுமே தவிர, புதிதாக நாம் ஒரு அணையைக் கட்டிவிட்டு, அதன் காரணமாகக் கீழே இருப்பவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையில்தான் அது குறித்து ஆய்வு செய்து வருகிறோம். அந்த ஆய்வுப் பணிகள் இந்த ஏப்ரல் மாதத்தோடு முடிந்துவிடும், அதன் பின்னர் அது குறித்து அரசு முடிவு எடுக்கும் என்று கருது கிறேன். ஏற்கனவே நீர்ப்பாசன வசதி பெற்று இருக்கும் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்காத வகையில் அணைக்கட்டு கட்ட வேண்டும். ஏற்கனவே பாசன வசதி பெற்றுக் கொண்டு இருப்ப வர்களுக்குப் பாசன உறுதி கொடுத்த பிறகு தான் (ஸ்டெபிலைசேஷன் நார்ம்ஸ்) புதிய பாசன வசதிகள் கொடுக்க முடியும். இதை மனதில் கொண்டு நிச்சயமாக அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன், வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, அந்த அணை கட்டுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அவர் சொல்லும் அணை கோமுகியாறு திட்டத்தின் கீழ் வருகின்றது. இது வெள்ளாறு திட்டம். இதற்கும் அதற்கும பாதிப்பு இல்லை. ஆகவே, உடனடியாக இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். ஆனால், அதே நேரத்தில் திரு. தியாகராாசன் குறிப்பிட்டது போல் பழைய ஆயக்கட்டுதாரர்கள், புதிய ஆயக்கட்டுதாரர்கள் என்று பிரச்சினை வருகிறது. அப்படி அந்த அணை கட்டுகின்ற போது, உபரி நீராக வரும் தண்ணீரை ஆற்றிலே விடவேண்டும். மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்க வேண்டும். ஆகவே, அணை கட்டுவதற்கு முன்பு எந்த அளவிற்குத் தண்ணீர் வந்து கொண்டு இருந்ததோ, அந்த அளவிற்குத் தண்ணீர் விடவேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் இந்த அணை மூலம் வருகின்ற தண்ணீர் தேங்கவிடப்படுமானால் நன்மையாக இருக்கும். ஆகவே, பழைய ஆயக்கட்டுதாரர் களுக்கும் புதிய ஆயக்கட்டுதாரர்களுக்கும் அந்தத் தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்கும் அளவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப் பினர் தியாகராசன் அவர்களுக்குச் சொன்ன பதிலை இதற்கும் சொல்கிறேன்.